# சுபீட்சம்

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள www.supeedsam.com

சனிக்கிழமை 09.11.2024 supeedsam.com supeedsam@gmail.com





# மதுபான அனுமதி பத்திரம்; உறுதிப்படுத்தினால் விலகுவேன்



மதுபானத்திற்கான அனுமதி பத்திரத்தை பெற்றுக்கொடுத்தமையை உறுதிப்படுத்தினால் நான் பாராளுமன்றம் தெரிவு செய்த பின்பும் அரசியலிருந்து விலகுவேன் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்தார்.

02 ஆம் பக்கத்தில்...

## வட, கிழக்குப் பிரதேசங்களில் தமிழ் பேசும் மக்களின் இருப்பினை உறுதிப்படுத்த அனைவரும் வாக்களிப்பது அவசியம்



இலங்கையின் வடக்கு கிழக்கு தமிழ் பேசும் மக்களுக்கு நிலையான, கௌரவமான உரிமைகளுடன் கூடிய நிலையான அரசியல் தீர்வு வேண்டி வடக்கு கிழக்கின் பல சிவில் அமைப்புக்கள் தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் கடந்த ஐம்பது ஆண்டுகளிற்கும் மேலாகத் தொடர்ந்து குரல் கொடுத்து வருகின்றன.

தமிழ் பேசும் மக்களான நாங்கள் இலங்கை அரச இனவாத அடக்குமுறையில்

02 ஆம் பக்கத்தில்...

## வன்னி தேர்தல் தொகுதியின் முதன்மை வேட்பாளர் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டமைப்பிற்கும் ஆதரவு!

வன்னி தேர்தல் தொகுதியில் சுயேட்சை குழு 4 இலாம்பு சின்னத்தில் போட்டியிடும் கட்சியின் முதன்மை வேட்பாளர் சிறிபாலன் ஜென்சி ஜனநாயக தமிழ் தேசிய கூட்டமைப்பிற்கும் வேட்பாளர் செல்வம் அடைக்கலநாதன் அவர்களுக்கு ஆதரவு தெரிவிப்பதாக மன்னாரில் வைத்து அறிவித்துள்ளார்.

மன்னார் ரெலோ அலுவலகத்தில் இடம்பெற்ற

02 ஆம் பக்கத்தில்...













# தமிழர்களது வாக்குகளை வீணாக்க வீணாய்ப் போனவர்கள் வீணையில் வந்திருக்கிறார்கள்






( வி.ரி.சகாதேவராஜா)

அம்பாறை மாவட்ட தமிழர்களது வாக்குகளை வீணாக்க, வீணாய்ப் போன சிலர் வீணையில் வந்திருக்கிறார்கள். பணத்திற்கு ஜால்ரா அடிக்கும் அவர்களை விரட்டுங்கள்.

இவ்வாறு சொறிக்கல்முனையில் இடம் பெற்ற பிரச்சாரக் கூட்டத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அம்பாறை மாவட்ட வேட்பாளரும், முன்னாள் காரைதீவு தவிசாளருமான கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் தெரிவித்தார்.

குறித்த கூட்டம் நேற்று மாலை சொறிக்கல்முனையில் சமூக செயற்பாட்டாளர் அனுசியா தலைமையில் ஜெயகாந்தன் பிரசன்னத்தில் நடைபெற்றது.

அங்கு அவர் மேலும் பேசுகையில் . வென்றாலும் தோற்றாலும் கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தை தரமுயர்த்துவேன் என்று கூறி கடந்த தேர்தலில் 15 சபாரியில் வந்தார் கருணா . என்ன நடந்தது? அன்று போனவர் போனவர் தான். சபாரியுமில்லை. ரயருமில்லை. அவரும் இல்லை விளைவு அம்பாறை மாவட்ட தமிழ் பிரதிநிதித்துவம் இல்லாதொழிக்கப்பட்டது.

இம்முறை அதே பாணியில் 588 கோடி ஊழலுடன் 5 ஆயிரம் ரூபாய் நோட்டுகளுடன் வலம் வருகிறார் ஒருவர்.

கடந்த காலங்களிலே இடம் பெற்ற கொரோனா மற்றும் வெள்ள நேரங்களில் இவர்கள் எங்கு சென்றார்கள்? எங்கே இந்த 5 ஆயிரம் ரூபாய் நோட்டுகள்? சிந்தியுங்கள்.

அம்பாறைச் சங்கிலிருந்து ஒரு போதும் சத்தம் வராது. இந்த தேர்தலின் களநிலைவரம் அறிந்தவர்களுக்கு அது விளங்கும். சங்கு ஒருபோதும் வரப் போவதில்லை.

எனவே, சொந்தம் பந்தம் என்று சங்குக்கு வாக்களித்து வாக்குகளை வீணடிக்க வேண்டாம்.

தேர்தல் காலத்தில் அரிசி வரும் சீனி வரும் சாராயம் வரும் வாங்கி அனுபவியுங்கள்.

தேர்தல் முடிந்ததும் இவை எதுவுமே வராது. அவர்களும் வரமாட்டார்கள்.

ஆனால் நாம் வருவோம். நிச்சயமாக வீடு வெல்லும். பொதுவாக ஓடும் குதிரைக்குத்தான் காசைக் கட்டுவார்கள் . அதுபோல தெரிவாகும் வீட்டுக்கு வாக்களியுங்கள் .வாக்களித்தால் மட்டுமே எமது வாழ்க்கை வளமாகும்.

சிலர் கப்பலில் வருவார்கள். பின்னர் சைக்கிளில் வருவார்கள்.பின்னர் படகில் வருவார்கள். இனிப் போக கட்சியே இல்லை என்ற நிலையில் இப்போது வீணாய்ப் போன சிலர் வாக்குகளை வீணாக்க வீணையில் வந்திருக்கிறார்கள். அவர்கள் சுத்திகரிப்பு தொழிலாளர்கள் முதல் அனைவருக்கும் என்ன செய்தார்கள் என்பதை உலகறியும். லஞ்சமும் ஊழலும் அவரது தாரக மந்திரம். இவர்களது பித்தலாட்டம் இம்முறை எதுவுமே மக்கள் மத்தியில் எடுபடாது .

தமிழருக்கு தலைவன் காட்டிய சின்னம் வீட்டுச் சின்னம். சிலர் வீட்டுக்குள் பிரச்சினை என்கிறார்கள். பாரிய கட்சியில் பிரச்சனை வருவது வழமை . பிரச்சனையை சரி செய்வது எமது திறமை. எனவே வீட்டுக்கு வாக்களித்து வாழ்வை வளமாக்கிக் கொள்ளுங்கள். என்றார்.

## வன்னி தேர்தல் தொகுதியின் முதன்மை....

**ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து** கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார் .

அதன்படி இந்த நாடாளுமன்ற தேர்தலில் பல சுயேட்சை குழுக்கள் போட்டியிடுகின்றன. அந்த சுயேட்சை குழுக்களின் நோக்கம் தமிழ் மக்களின் வாக்குகளை பிரித்து தமிழ் மக்களின் பிரதிநிதித்துவத்தை இல்லாமல் செய்வதாகும் என்பதை கடந்த சில நாட்களாக நான் அறிந்து கொண்டேன்.

இந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் இருக்கும் சக்திகள் நிறைய பணத்தை கொட்டியுள்ளார்கள்.

அந்த அடிப்படையில் சுயேட்சை குழு 4 இலாம்பு சின்னத்தில் போட்டியிடும் முதன்மை வேட்பாளராகிய நான் தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக செயல்படும் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டமைப்புக்கு ஆதரவு தெரிவிக்கிறேன்.

தான் போட்டியிட இருந்த சுயேட்சை குழு மாற்றத்தை தேடி ஓடிக்கொண்டிருக்கும் மாவீரர்களுக்கும் ,மாவீரர் குடும்பங்களுக்கும் மாற்றாற்றல் உள்ளவர்களுக்கும் பொய்யான வாக்குறுதியை வழங்கியதை நான் இனம் கண்டு கொண்டு உள்ளமையினால் அவர்களுக்கு என்னால் எந்த துரோகமும் இழைக்கப் படக்கூடாது என்பதற்காகவே நான் இந்த சுயேட்சை குழுவில் இருந்து வெளியேறி உள்ளதாக அவர் தெரிவித்தார்.

மேலும் சுயேட்சையாக போட்டியிடும் கட்சிகள் தமிழ் மக்களின் வாக்குகளை சிதறடித்து தமிழ் மக்களின் பிரதிநிதித்துவத்தை இல்லாமல் ஆக்காது சங்கு சின்னத்தில் போட்டியிடும் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டமைப்புக்கு உங்கள் ஆதரவை வழங்குங்கள் என கோரிக்கையும் விடுத்துள்ளார்.

இதில் கட்சியின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் மற்றும் கட்சியின் மன்னார் மாவட்ட இணைப்பாளர் டானியல் வசந்த் அவர்களும் கலந்து கொண்டிருந்தனர்.

## வட, கிழக்குப் பிரதேசங்களில்

இருந்து விடுபட்டு நிம்மதியான, இயல்பான எமது அடையாளங்களுடன் வாழ்வதற்காகவே நிலையான அரசியல் தீர்வு எமக்கு முக்கியமாகின்றது.

அந்தவகையில் வடக்கு கிழக்கு மக்களுக்கு நிலையான அரசியல் தீர்வாக எமது சுயநிர்ணய உரிமையை உறுதிப்படுத்தத்தக்கவகையில் மீளப்பெறமுடியாத சமஷ்டி முறையிலான தீர்வையே நாம் திடமாக வலியுறுத்துகின்றோம், இத்தீர்வினையே தமிழ் பேசும் சிவில் அமைப்புக்களும், வடக்கு கிழக்கு தமிழ்; கட்சிகளும் தமிழினப் பிரச்சனைக்கான தீர்விற்காக இயங்கும் அனைத்துத் தரப்பினரும் வலியுறுத்தி நிற்கின்றார்கள்.

ஆகையால் எதிர்வரும் 14 ஆம் திகதி கார்த்திகை மாதம் 2024 ஆம் ஆண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களை தெரிவு செய்வதற்கான பொதுத்தேர்தல் நடைபெற இருக்கின்ற நிலையில் வடக்கு கிழக்கு பிரதேசங்களில் வாழுகின்ற தமிழ் பேசும் மக்களாகிய நாங்கள் எமது இருப்பை தக்க வைத்துக்கொள்வதற்காகவும் 76 வருட தேசிய இனப்பிரச்சினைகக்கான மேற்கூறிய நிலையான அரசியல் தீர்வினைத் தொடர்ச்சியாக இலங்கை தேசத்திலும் சர்வதேசத்திலும் வலியுறுத்தக் கூடிய வடகிழக்கில் உள்ள கட்சிகளை ஆதரிக்க வேண்டிய நிலையில் இருக்கின்றோம்.

**அன்பார்ந்த
தமிழ் பேசும் மக்களே**

காலங்காலமாக சிங்கள பேரினவாத அரசினால் நாம் திட்டமிட்ட வகையில் பிரித்தாளப்பட்டு இருப்பதனால் இத்தேர்தல் களத்தினில் எமது தமிழ் பேசும் கட்சிகள் தனித்தனியாகவும் போட்டி போடுகின்றன. என்றாலுங்கூட, இப்பொதுத் தேர்தலானது எமது தீர்வை வலியுறுத்தும் முக்கியத்துவம் வாய்ந்ததாகவும் எமது இருப்பை தக்க வைக்கும் வகையிலான பிரதிநிதிகளை தெரிவு செய்யும் தேர்தலாகவும் இருப்பதனால் நாம் தமிழ் தேசியப் பரப்பிலுள்ள மேற்கூறிய தீர்வை வலியுறுத்திவரும் தமிழ்க் கட்சிகளின் வேட்பாளர்களுக்கு விருப்பு வெறுப்பின்றி வாக்களிக்க வேண்டும் எனக் கோரி நிற்கிறோம்- என்றுள்ளது.




## மதுபான அனுமதி பத்திரம்;

கிளிநொச்சியில்இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

2024ம் ஆண்டு பாராளுமன்ற தேர்தலில் இலங்கை தமிழரசுக் கட்சியின் முதன்மை வேட்பாளராக களம் இறங்கியுள்ள நிலையில் பிரச்சாரங்கள் தீவிரமடைந்துள்ள நிலையில் மக்கள் தமிழரசுக்கட்சியின் பால் அலையை ஏற்படுத்தியிருக்கின்ற நிலையில் அது பலருக்கு குடைச்சலை ஏற்டுத்தியுள்ளது.

தமிழரசுக்கட்சிக்குள் உள்ளவர்களுக்கும் இந்த நிலை ஆதங்கத்தையும் கவலையையும் ஏற்படுத்தியுள்ளது.

தமிழரசுக்கட்சி தலைவராக ஜனநாய ரீதியில் போட்டியில் வெற்றிபெற்றிருந்தேன்.தலைவராக தெரிவு செய்த என்னை எமது கட்சிக்குள் வழக்குக் போட்டு செயற்படாது தடுத்தனர். மக்கள் இது தொடர்பாக செய்தி சொல்ல முற்படுகின்றனர்.

நாங்கள் போகின்ற இடங்களிலும் சொல்கின்றனர்.எமது கட்சிக்குள் உள்ள முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் சேறு பூசும் முயற்சியில் இங்குள்ள முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருடன் சேர்ந்து இன்னொருவரும் சேர்ந்து எனக்கு எதிராக சேறுபூசும் நடவடிக்கையில் ஈடுபட்டுவருகின்றனர்.

இது தொடர்பாக மக்களுக்கு தெளிவூட்ட வேண்டிய நிலையுள்ளது.

மக்களுக்கு சொல்லி வருகின்றேன் நான் கிளிநொச்சியிலிருந்து யாருக்காவது பார் அனுமதிப்பத்திரத்திற்கு சிபார்சு செய்திருந்தால் அதனை உறுதிப்படுத்தினால் அரசியலிருந்து என்னை விலக்கி விடுங்கள். அதை எல்லாம் செய்ய முடியாதவர் ஏற்கனவே கிளிநொச்சியிலிருந்து பார் தொடர்பான விபரங்களை யாரோ ஒருவர் தேடி எடுத்திருக்கிறார்.

அதனை ஒருவர் என்னுடைய கடிதத்தலைப்பை பயன்படுத்தி போலியாக நான் அனுமதி கோரியதாக தெரிவித்து காட்டியிருக்கிறார்.

அதிலே சித்தார்த்தனுடைய பெயரும் குறிப்பிட்டிருக்கிறது. என்னுடைய கடித தலைப்பில் நான் கோரிக்கை விடுத்ததாக தெரிவித்து சித்தார்த்தனுடைய பெயர் எப்படி வரும்.

இதன் மூலம் மக்கள் விளங்கிக் கொள்வார்கள் பொலிஸ் நிலையத்தில் உரியவருக்கு எதிராக முறைப்பாடு செய்துள்ளேன்.

மக்களிடம் ஒன்றை சொல்கிறேன் மக்கள் என்னை நம்புங்கள் மதுபானத்திற்கான அனுமதி கொடுத்தமையை உறுதிப்படுத்தினால் நான் பாராளுமன்றம் தெரிவு செய்த பின்பும் அரசியலிருந்து விலகுவேன் என தெரிவித்தார்.

# தேர்தலில் போட்டியிடும் கட்சிகளுக்கு ஏன் மக்கள் வாக்களிக்க வேண்டும்?

**( வாஸ் கூஞ்ஞ)**

எதிர்வரும் பாராளுமன்ற தேர்தலில் போட்டியிடும் கட்சிகளுக்கு ஏன் மக்கள் வாக்களிக்க வேண்டும்? தமிழ் மக்களின் எதிர்பார்ப்பு என்ன?

இது தொடர்பாக அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளும் சிவில் சமூக பிரமுகர்களும் பங்கேற்கும் மக்கள் மன்றம் சனிக்கிழமை (09.11.2024) காலை 9.30 மணிக்கு யாழ்ப்பாணம் பிரதான வீதியில் அமைந்துள்ள கலைத்தூது மண்டபத்தில் நடைபெறுகின்றது.

தமிழ் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் .ஏற்பாட்டில் இதன் தலைவர் வி.எஸ்.சிவகரன் அவர்களின் நெறிப்படுத்தலின் கீழ் இது நடைபெறுகின்றது.

இந்நிகழ்வில் சனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் (தமிழரசு கட்சி)

சனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா (சுயேச்சைக்குழு 14)

முதுநிலை சட்டத்ரணி ந.சிறிக்காந்தா (ஐ.த.தே.க.)

சட்டத்ரணி வீ.மணிவண்ணன் (த.ம.கூ)

அருத்தந்தை ஜெயக்குமார் அடிகளார்.

கலாநிதி விக்னேஸ்வரன் அரசவியல் துறை யாழ் பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் திருமதி கோதலை மதன் முதுநிலை சட்டத்துறை யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளர் ஆகியோர் இதில் பேச்சாளராகக் கலந்து கொள்ளுகின்றனர்.

இதில் கலந்துகொள்ள சகலருக்கும் பொதுவான அழைப்புதலும் வழங்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## லோறி விபத்தில் ஒருவர் உயிரிழப்பு



**தலவாக்கலை பி.கேதீஸ்**

இராகலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கந்தப்பளை கொங்கோடியா பகுதியில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார். அத்துடன் மேலும் 6 பேர் காயமடைந்துள்ளதாக இராகலை பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த விபத்து (08) வெள்ளிக்கிழமை காலை இடம்பெற்றுள்ளது.

கந்தப்பளை பிரதான நகரில் இருந்து கொங்கோடியா பகுதிக்கு மரக்கறிகளை சேகரித்து ஏற்றச் சென்ற டிப்பர் ரக வாகனமொன்று வீதியை விட்டு விலகி சுமார் 30 அடி பள்ளத்தில் பாய்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளதாக இராகலை பொலிஸார் தெரிவித்தனர். விபத்தில் 43 வயதான ஒருவரே உயிரிழந்துள்ளதாகவும் விபத்தில் காயமடைந்த 6 பேரும் நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தனர்.இவ் விபத்து குறித்து இராகலை பொலிசார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

## காட்டு யானைகளின் தொல்லை 15 நாட்களில் 13 வீடுகள் சேதம்!



**எப்.முபாரக்**

திருகோணமலை-மொரவெவ பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட தெவனிபியவர பகுதியில் காட்டு யானைகளின் தொல்லையினால் நாளுக்கு நாள் பாதிக்கப்பட்டு வருவதாக அப்பகுதியிலுள்ள மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்

காட்டு யானைகளின் அச்சுறுத்தல் காரணமாக மஹதிவுல்வெவ தெவனிபியவர கிராம மக்களின் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டுகின்றனர்.

கடந்த பதினைந்து நாட்களில் காட்டு யானைகளினால் 13 வீடுகள் நாசமாகியுள்ள போதிலும், வீடுகளுக்கும் சொத்துக்களுக்கும் தீங்கு விளைவிப்பதாக வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளுக்கு தெரிவித்த போதிலும் மாவட்ட செயலாளரிடம் மகஜர் ஒன்றை சமர்ப்பிக்குமாறு கோரியுள்ளதாகவும் கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.

இருந்த போதிலும் குறித்த கிராமத்துக்குள் காட்டு யானையின் தொல்லை வீடுகள் நாசமாக்கப்பட்டமை தொடர்பில் தெரியப்படுத்தி இருந்த போதிலும் மொரவெவ பிரதேச செயலாளருக்கு கிராம உத்தியோகத்தர் ஊடாக தெரியப்படுத்தி இருந்த போதிலும் எது இது நடவடிக்கை எடுக்கவில்லை எனுவும் குறிப்பிடுகின்றனர்.

உயிருக்கு ஆபத்து ஏற்படும் முன், காட்டு யானையை அப்பகுதியிலிருந்து அகற்ற வேண்டும் எனவும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கிராம மக்கள் கோரிக்கை விடுகின்றனர்.

## மட்டக்களப்பில் உயர் பொலிஸ் அதிகாரிகளுடன் விசேட கலந்துரையாடல்!!

**எஸ்.எஸ்.அமிர்தகழியான் மட்டக்களப்பு**

எதிர் வரும் 2024 பாராளுமன்ற தேர்தல்களை முன்னிட்டு மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபரும் மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலகருமான திருமதி ஜஸ்டினா முரளிதரன் தலைமையில் உயர் பொலிஸ் அதிகாரிகளுடனான கலந்துரையாடல் பழைய மாவட்ட செயலகத்தில் (08) திகதி இடம் பெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர் சட்டத்தரணி எம்.பி.எம்.சுபியான் ஏற்பாட்டில் இக் கலந்துரையாடல் நடை பெற்றது.

தேர்தல்களின் போது பாதுகாப்பு விடையங்கள் தொடர்பான முன்னாயத்த நடவடிக்கைகள் தொடர்பாக இதன் போது தெளிவூபடுத்தப்பட்டது.

இந் நிகழ்வில் மட்டக்களப்பு தேர்தல் முறைப்பாடுகளுக்கான உதவி தெரிவத்தாட்சி அவலர் திருமதி. நவரூபரஞ்ஜினி முகுந்தன், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அமல் எதிரிமான, மாவட்ட செயலக நிர்வாக உத்தியோகத்தர் கே. மதிவண்ணன், மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.








## சட்டவிரோத மரக்களஞ்சியசாலை வைத்திருந்ததாக கயுவத்தைக்கு பொறுப்பான அத்தியட்சகர் ஒருவர் கைது

**( வாஸ் கூஞ்ஞ)**

மன்னார் சிலாவத்துறை பொலிஸ் பிரிவில் சட்டவிரோதமான முறையில் மரக்குற்றி களஞ்சியம் ஒன்றை நடாத்தி வந்ததாக கயுவத்தைக்கு பொறுப்பான அத்தியட்சகர் ஒருவர் 1820 மரத்துண்டுகளுடன் சந்தேகத்தின் மீது கைது செய்யப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் புதன்கிழமை (06) இடம்பெற்றுள்ளது. இது தொடர்பாக தெரிய வருவதாவது

மன்னார் சிலாவத்துறை பொலிஸ் நிலையத்துக்கு உட்பட்ட பகுதியிலுள்ள கயுவத்தை பகுதியில் அனுமதி பத்திரமின்றி கயுவத்தை பகுதியில் மரச்சாலை இயங்கி வருவதாக பொலிசாருக்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலைத் தொடர்ந்து பொலிசார் இவ் இடத்தை கைப்பற்ணீயுள்ளனர்.

மன்னார் பிரிவு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எல்.ஏ.எஸ்.சந்திரபாலவின் பணிப்புரையின் கீழ் மன்னார் மாவட்ட குற்றப்புலனாய்வு பிரிவின் அதிகாரிகளால் மாவட்ட குற்றதடுப்பு பிரிவு பொறுப்பதிகாரியான பொ.பா.சில்வாவின் வழிகாட்டுதலின் கீழ்இ பிரதேச குற்றப் புலனாய்வுப் பிரிவினர் பொ.சா36501 ரத்ணமனல இ 74927 குணசிங்க பொ.கொ37662 கருணாசிங்க , 37883 பிரேமரத்ன இ 66638 ரத்னாயக்க இ 83790 விமுர்த்தி 90464 திசாநாயக்க இ 313999 சுபிதரன் என்போரால் இவ் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இக்களஞ்சியத்தில் பெருந் தொகையான முதிரை . பாலை மற்றும் பல்வேறு மரக்குற்றிகள் பலகைகள் சுமார் 1820 வைத்திருந்தமை கண்டு பிடிக்கப்பட்டதுடன் இது தொடர்பாக கயுவத்தைக்கு பொறுப்பான அத்தியட்சகர் ஒருவரே நடாத்தி வந்ததாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

வழக்கு பொருட்கள் மற்றும் சந்தேகநபரும் மேலதணீக நடவடிக்கைக்காக சிலாவத்துறை பொலிஸில் ஒப்படைக்கபட்டுள்ளது என பொலிசார் தெரிவித்தனர்.

# 32 ஆயிரம் சட்டவிரோதமாக அச்சிடப்பட்ட மாதிரி வாக்குச்சீட்டுக்கள் கல்முனையில் மீட்பு






**(பாறுக் ஷிஹான்)**

32 ஆயிரம் சட்டவிரோதமாக அச்சிடப்பட்ட மாதிரி வாக்குச்சீட்டுக்கள் அரசியல் கட்சி ஒன்றின் பணிமனைக்கு வாகனம் ஒன்றில் எடுத்துச் சென்ற இருவர் கைது செய்யப்பட்டனர்.

அம்பாறை மாவட்டம் கல்முனை தலைமையக பொலிஸ் பிரிவிற்குட்பட்ட காசீம் வீதி பகுதியில் அண்மையில் திறந்து வைக்கப்பட்ட கட்சி ஒன்றின் பணிமனைக்கு இவ்வாறு சட்டவிரோத மாதிரி வாக்குச்சீட்டுக்கள் எடுத்து செல்லப்பட்ட நிலையில் கைப்பற்றப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்ட தேர்தல் திணைக்கள அதிகாரிகள் மற்றும் பொலிஸார் இரகசிய தகவல் ஒன்றினை அடுத்து குறித்த பணிமனைக்கு அருகில் தேடுதல் மேற்கொண்ட நிலையில் பொதி செய்யப்பட்ட சுமார் 32 ஆயிரம் வாக்கு சீட்டுக்களுடன் இரு சந்தேக நபர்களை கடந்த வியாழக்கிழமை (7) மாலை கைது செய்திருந்தனர்.

மேலும் இவ்வாறு மீட்கப்பட்ட மாதிரி வாக்கு சீட்டில் ஒரு முஸ்லீம் தேசிய கட்சி ஒன்றின் சின்னத்திற்கும் இலக்கம் இரண்டிற்கும் புள்ளடி இடப்பட்டிருந்ததாக எமது பிராந்திய செய்தியாளர் பாறுக் ஷிஹான் தெரிவித்தார்.

தற்போது கைது செய்யப்பட்ட இரு சந்தேக நபர்களும் பொலிஸ் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டதுடன் மீட்கப்பட்ட சட்டவிரோதமான வாக்குச்சீட்டுக்கள் யாவும் கல்முனை நீதிவான் நீதிமன்றில் சட்ட நடவடிக்கைக்காக ஒப்படைக்க கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய பொலிஸாரும் அதிகாரிகளும் நடவடிக்கை எடுத்துள்ளனர்.







**தலவாக்கலை பி.கேதீஸ்**

தலவாக்கலை அருள்மிகு ஸ்ரீ கதிரேசன் திருக்கோயிலில் இடம்பெற்ற கந்த சஷ்டி சூரசம்ஹார நிகழ்வுகளை இங்கு காணலாம்.

## கொட்டும் மழையிலும் சூரன் போர்







**( வி.ரி.சகாதேவராஜா)**

இந்துகளின் கந்தசஷ்டி விரதத்தின் இறுதி நாளான (7) வியாழக்கிழமை மாலை பரவலாக சூரன் போர் சிறப்பாக இடம் பெற்றது.

கொட்டும் மழைக்கு மத்தியில் காரைதீவு ஸ்ரீ கந்தசுவாமி ஆலயத்தில் பிரதம குரு சிவஸ்ரீ சபா கோவர்த்தன சர்மா தலைமையில் இந்த நிகழ்வு இடம் பெற்றது.

ஆயிரக்கணக்கான மக்கள் கொட்டும் மழையை பொருட்படுத்தாமல் குடையை பிடித்துக் கொண்டு சூரன் போரை கண்டு களித்தனர்.






## சமூர்த்தி அதிஸ்ட இலாப சீட்டிலுப்பின் கீழ் வாழ்வாதார உதவி



**(சர்ஜுன் லாபீர்)**

சமூர்த்தி அதிஸ்டலாபச் சீட்டிலுப்பின் கீழ் வாழ்வாதார அபிவிருத்தி வேலைத் திட்டத்திற்காக உபகரணங்கள் வழங்கி வைக்கும் நிகழ்வு (08) சம்மாந்துறை பிரதேச செயலக சமூர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் எம்.பி.எம் ஹுசைன் தலைமையில் பிரதேச செயலக வளாகத்தில் இடம்பெற்றது.

இந் நிகழ்வுக்கு பிரதம அதிதியாக சம்மாந்துறை பிரதேசசெயலாளர் எஸ்.எல் முஹம்மது ஹனீபா கலந்து கொண்டு வாழ்வாதார பொருட்களை வழங்கி வைத்தார்.

மேலும் இந் நிகழ்வில் சமூர்த்தி முகாமைத்துவ பணிப்பாளர் எம்.ஹம்சார், சமூர்த்தி பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் மற்றும் உதவி முகாமையாளர் சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# மட்டக்களப்பில் சித்துவிலி சித்தம் சித்திரப்போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்கள் கௌரவிப்பு







(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஜஸ்டினா முரளிதரன் தலைமையில் உதவி மாவட்ட செயலாளர் ஜீ பிரணவன் மேற்பார்வையின் கீழ் 'சித்துவிலி சித்தம்' சித்திரப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கு கௌரவம் வை எம் சி ஏ மண்டபத்தில் இன்று (08) வழங்கப்பட்டது.

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையினால் அகில இலங்கை ரிதியில் பதாதை, சித்திரம், மற்றும் கார்டுன் போட்டிகளில் மாவட்ட மட்டத்தில் வெற்றி பெற்றவர்களுக்கு பதக்கம் மற்றும் சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டது.

உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு சிறுவர் உரிமைகள் மற்றும் சிறுவர் பாதுகாப்பை தொணிப்பொருளாகக் கொண்டு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையினால் நான்காவது தடவையாக சித்துவிலி சித்தம் 2024 சித்திரப்போட்டி நடைபெற்றது.

மாவட்ட மட்டத்தில் முதலாம், இரண்டாம், மூன்றாம் நிலைகளில் வெற்றியிட்டியவர்களுக்கு பதக்கம் அணிவித்து சான்றிதழ்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். இதன் போது வெற்றி பெற்ற ஆசிரியர்களுக்கும் சான்றிதழ் வழங்கி வைக்கப்பட்டது. குறிப்பிடத்தக்கதாகும்.

இந் நிகழ்வில் மண்முனை தென் எருவில் பற்று பிரதேச செயலாளர் திருமதி சிவப்பிரியா வில்வரத்னம், மண்முனை வடக்கு கோட்டக்கல்வி பணிப்பாளர் பிரபாகரன், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் மாவட்ட உத்தியோகத்தர்களான திருமதி நிஷா ரியாஸ், த . பிரபாகர் மற்றும் பிரதேச சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் என பலர் கலந்து கொண்டனர்.

# ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சி அமையும் பட்சத்தில் நாட்டில் நிச்சயம் மக்கள் ஆட்சி மலரும்

(க.கிஷாந்தன்)

ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சி அமையும் பட்சத்தில் நாட்டில் நிச்சயம் மக்கள் ஆட்சி மலரும் எனவும், கண்டி மாவட்ட தமிழ்ப் பாராளுமன்ற பிரதிநிதித்துவம் ஊடாக தமிழ் பேசும் மக்கள் பல சேவைகளை பெற்றுக்கொள்ள முடியும் எனவும் ஐக்கிய மக்கள் கூட்டணியின் கண்டி மாவட்ட பாராளுமன்ற வேட்பாளர் பாரத் அருள்சாமி தெரிவித்தார்.

சிலவேளை மக்கள் பிரதான எதிர்க்கட்சி என்ற அந்தஸ்த்தை எமக்கு வழங்கினால் கூட எதிரணியில் இருந்தேனும் கண்டி மாவட்ட தமிழ் பேசும் மக்களின் குரலாக சபையில் ஓயாது ஒலித்துக்கொண்டிருப்பேன் எனவும் அவர் கூறினார்.

நாவலப்பிட்டி வெஸ்டோல் பகுதியில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.





இது தொடர்பில் மேலும் கூறியவை வருமாறு,

பாராளுமன்றத் தேர்தலுக்கு இன்னமும் 5 நாட்களே எஞ்சியுள்ளன. பிரச்சார நடவடிக்கைகள் யாவும் நவம்பர் 11 ஆம் திகதி நள்ளிரவுடன் முடிவுக்கு வருகின்றது. வேட்பு மனு தாக்கல் முதல் இதுவரையான காலப்பகுதியில் கண்டி மாவட்டத்தில் 13 தேர்தல் தொகுதிகளுக்கும் சென்று மக்கள் சந்திப்புகளை நடத்தி இருந்தேன்.

இதன்போது கண்டி மாவட்ட தமிழ்ப் பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்தின் முக்கியத்துவத்தை மக்கள் உணர்ந்துள்ளதுடன், இம்முறை அந்த பதவியை ஆளுமையுள்ள, கறைபடியாத, தூய்மையான அரசியலை முன்னெடுக்கும் பாரத் அருள்சாமியாகிய எனக்கு வழங்குவதற்கு தீர்மானித்துள்ளது என்பது தெளிவாக புரிந்தது.

அதேபோல ஐக்கிய மக்கள் சக்தி போன்ற பிரதான கட்சியொன்றுக்கு தமிழ் மக்கள் வாக்களிக்கும்போதே எவ்வித சவாலும் இன்றி தமிழ்ப் பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தை தக்க வைத்துக்கொள்ள முடியும். கணிசமானளவு வாக்குகளைப் பெறமுடியாத கட்சிகளுக்கு அளிக்கும் வாக்குகள் பயன் அற்றவை.

எனவே, ஐக்கிய மக்கள் சக்திக்கு தமிழ் மக்கள் பேராதரவு வழங்கி, கண்டி மாவட்டத்தில் எனக்கான வாக்கை வழங்க வேண்டும். அதேபோல முஸ்லிம் சொந்தங்களும், சிங்கள மக்களும் தமக்கான மூன்று விருப்பு வாக்குகளில் ஒன்றை எனக்கு வழங்குவார்கள் என உறுதியாக நம்புகின்றேன். அவ்வாறு செய்யுமாறு கோரிக்கையும் விடுக்கின்றேன்.

# பொதுத் தேர்தலில் வாக்களிப்பது எப்படி?

(வி.ரி. சகாதேவராஜா)

எதிர்வரும் பாராளுமன்ற தேர்தலில் வாக்காளர்கள் பின்பற்ற வேண்டிய வழிகாட்டுதல்களை தேசிய தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ளது.

பொலன்னறுவை, மொனராகலை மற்றும் களுத்துறை ஆகிய தொகுதிகளுக்கான வாக்குச் சீட்டுகள் ஒரே நெடுவரிசையிலும், ஏனைய தொகுதிகளுக்கான வாக்குச் சீட்டுகள் இரண்டு பத்திகளிலும் அச்சிடப்படும் என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

உத்தியோகபூர்வ வாக்குச் சீட்டுடன் ஒவ்வொரு வீட்டுக்கும் விநியோகிக்கப்படும் வேட்பாளர்களின் பட்டியலில் ஒவ்வொரு தொகுதிக்கான மாதிரி வாக்குச் சீட்டு அச்சிடப்படும்.

வாக்காளர்கள் வாக்களிப்பதற்கும் விருப்பங்களை குறிப்பதற்கும் புள்ளடியை (X) மட்டுமே பயன்படுத்துமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

வாக்களிக்கும் போது வாக்காளர்கள்ம அதற்கேற்ப வாக்களிப்பு வழிகாட்டுதல்களைப் பின்பற்ற வேண்டும்;







